# திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.

தலையங்கம்

# அறிஞர் அண்ணாவின் சூளுரை !

இந்தித் திணிப்பை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிவரும் அரும்பணியினையும் கடமையினையும் நாடு அறிந்த தாகும். 1938-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்தித் திணிப்பை எதிர்த்து தாய்மொழியின் உரிமையைக் காத்துவருவதில் தி. மு. கழகத்திற்குச் சிறப்பான பாரம்பரியம் உண்டு.

ஆதலின், மீண்டும் தலைவிரிகோலமாக ஆதிக்கம் செலுத்த முற்பட்டுள்ள இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் கழகம் முனைந்து நிற்கிறது. அதற்கேற்பவே சூன் திங்களில் சென்னையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவிலும் 4—8—63 அன்று சேலத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டிலும் கழகம் தனது உறுதிப்பாட்டினைத் திட்டவட்டமாக நினைவூட்டியிருக்கிறது.

கழகத்தின் இந்த எடுத்துக்காட்டினை மதித்து இந்திய அரசினர் தமது மொழி ஆதிக்க வெறியிலிருந்து திருந்துவார்களேயானால் இந்தியத் துணைக்கண்டத்தின் ஒற்றுமை ஓங்கி வளரக்கூடிய நல்வாய்ப்பு அமையப்பெறலாம்.

ஆனால் இந்திய அரசினரோ, சீன ஆக்ரமிப்பைக்காட்டி எதிர்க் கட்சிகள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது நியாயமல்லவென்றும் அதனால்

என். வி. என்.

நாட்டின் பாதுகாப்பு சீர்குலையுமென்றும் உபதேசம் செய்து வருகின்றனர்.

உபதேசம் செய்வதற்கு முன்பு உபதேசம் செய்வோர் தமது செயல்களைச் சற்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இந்திய அரசினர் அப்படி ஆரஅமர ஆராய்ந்திருப்பார்களே யானால், சீனஆக்ரமிப்பு தீராத இந்த நெருக்கடியான நேரத்தில் இந்தித் திணிப்பு சட்டத்தை நிறைவேற்றும் பெருந்தவறை செய்திருக்கமாட்டார்கள்.

தவறு செய்வதுகூட இயற்கை. ஆனால் அதை மற்றவர்கள் சுட்டிக்காட்டும்போது திருத்திக்கொள்வதுதான் விவேகமும் நேர்மையுமாகும். ஆனால் இந்திய அரசினர் அவ்வித நேர்மைப் பாதையில் செல்வதற்கு பதிலாக எதிர்க்கட்சிகளுக்கு உபதேசம் செய்யும் எளிதான வேலையில் ஈடுபட்டுள்ளனர்,

அடுத்து, சீன ஆக்ரமிப்பு நெருக்கடி இப்போது வளர்ந்து வருகிறதென்பது உண்மையானால் சீன ஆக்ரமிப்பாளர்களுக்கு வெளிப்படையாக ஆதரவு தருபவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்தது ஏன்? அவர்களை விடுதலை செய்யக்கூடாது என்பது நமது எண்ணமல்ல; சீன ஆதரவாளர்கள் என்ற ஐயப்பாட்டிற்குரியவர்களையே விடுதலை செய்வதென்றால் சீன ஆக்ரமிப்பு நெருக்கடி என்பது குறைந்து வருகிறதென்றுதானே மக்கள் கருதுவர் ?

எனவே, இந்தித்திணிப்புக் கிளர்ச்சியை அடக்க சீன ஆக்ரமிப்புப் பூச்சாண்டியைக்காட்டுவது அரசியல் அறமாகாது. அதுமட்டுமல்லாது எத்தனை காலத்துக்குத்தான் இதுபோன்ற பூச்சாண்டிகளைக் காண்பித்து இந்தி ஆதிக்கம் தர்பார் நடத்திவரமுடியும் என்று கேட்கிறோம்.

சீன ஆக்ரமிப்பு உண்மையிலேயே நெருக்கடி நிலையை உண்டு பண்ணுமானால் ஆளுங்கட்சியைவிட மிகத்தூய்மையாக திராவிட முன்னேற்றக் கழகம் தனது அறப்போரை நிறுத்திவைத்துவிட்டு, சீனவெறியர்களை விரட்டுவதற்குத் தீவிரமாக முற்படும். அரசினரின் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பைத் தரும் என்பதில் துளிகூட ஐயமில்லை. ஆனால் சீன ஆக்ரமிப்பு மேலோங்கிவிட்டது என்று பிரலாபித்துக்கொண்டே இந்தித்திணிப்பை நிலைபெறச் செய்து விடலாம் என்று அரசினர் எண்ணுவார்களேயானால் அந்த சூழ்ச்சியைக்கண்டு கழகம் ஏமாறாது. இதைத்தான் நமது மாபெருந்தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் 6—8—63 அன்று காஞ்சியில் நடைபெற்ற கழகக்கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்தியிருக்கிறார்.

''இன்று, மூன்று சிக்கல்களை தி.மு.கழகம் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. முதலாவது சிக்கல், பிரிவினைத்தடை மசோதா; இது பாராளுமன்றத்தில் நிறைவேறியது, இப்போது தமிழகச் சட்ட சபைக்கு வந்திருக்கிறது. இரண்டாவது சிக்கல் இந்தித் திணிப்பு. இந்தியை எதிர்த்து விரட்டவேண்டியது தி. மு. கழகத்தின் பொறுப்பாகிவிட்டது. மூன்றாவது சிக்கல் தேர்தல். ஒருகையில் குடையுடனும், ஒருகையில் கைக் குட்டையுடனும் உயரத்தில் கம்பியில் சைக்கிளில் கீழே விழாமல் செல்லும் சர்க்கசுக்காரரைப்போல் தி. மு. கழகம் இம்மூன்று சிக்கல்களையும் ஒரே சமயத்தில் சமாளித்து வருகிறது. கழகம் அழிந்துவிடாமலும், கொள்கையைக் கைவிடாமலும் தேர்தலில் வெற்றிபெற்று வருகிறோம்.

முதல் சிக்கலைச் சமாளிக்க பொறுப்புணர்ச்சி வேண்டும்; இரண்டாவது சிக்கலைச் சமாளிக்க மனஎழுச்சி தேவை; மூன்றாவது சிக்கலில் அதாவது தேர்தலில் வெற்றி காண, எதிரியின் தேர்தல் தந்திரங்களை அறிந்துகொண்டு அதைத்தோற்கடிக்கும் திறன் வேண்டும். இதற்குத் திருவண்ணாமலை ஓர் எடுத்துக்காட்டு.

சீன அபாய நேரத்தில் பல சிக்கல்களை எழுப்பியது ஆட்சியாளர்கள்தான். சீனா மீண்டும் படையெடுக்குமானால் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை கழகம் தள்ளிவைக்கும். எனினும் செப்டம்பர் 2-ம் நாளிலிருந்து இந்திப் போராட்டத்தில் இறங்கி சிறை செல்ல எந்த நேரமும் ஆயத்தமாக இருக்கிறேன்.''

—என்று நமது அண்ணா அவர்கள் காஞ்சியில் சூளுரைத்திருக்கிறார்கள்.

ஆதலின் கழகத் தோழர்களே, கழகத்தை நடத்திச்செல்லும் நாடெங்குமுள்ள நிர்வாகிகளே, அக்டோபர் 6-ம் நாள் தலைநகரில் நடைபெறயிருக்கும் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் அறப்போராட்ட நாளை அறிவித்ததும், தட்டுத்தடங்கலின்றி, கடமையாற்ற—சிறை செல்ல இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

20—8—63
10 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

# தோழர் ம.பொ.சி. விவேகம் பெறுவாரா?

— 'கதிரோன்' —

திருவண்ணாமலையில் நடந்த இடைத் தேர்தலில் தி. மு. க. விற்கு திருவண்ணாமலை மக்கள் நல்லாதரவைத் தந்து, அதே நேரத்தில் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போருக்கும் அவர்களைச் சூழ்ந்திருந்து திருவண்ணாமலையில் கொட்டமடித்த வேறு பல கும்பல்களுக்கும் நல்லதொரு புத்தியைப் புகட்டிவிட்டார்கள்!

திருவண்ணாமலைக்குப் போய் முகத்திலே கரியைப் பூசிக் கொண்ட சில அப்பாவிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து ஏளனம் செய்கிறார்கள்!

தன் முகத்திலே இருக்கிற கரியைக் கழுவிக்கொள்ளாது, வழியில் போகும் ஒருவன் முகத்திலே (ஒன்றுமில்லாமல் இருக்கும் போதே) விஷமத்தனமாக 'உன் முகத்தில்தான் கரியிருக்கிறது...' என்று கைகொட்டி நகைக்கிறது அக் கூட்டம்!

எங்கள் முகங்களிலே கரியில்லை அப்பனே! உங்கள் முகங்களைக் கண்ணாடியில் சென்று பாருங்கள். அப்பொழுது உங்கள் முகங்களிலே வழியும் 'கோரம்' தெரியும். அப்படிப் பார்ப்பதற்குக் கண்ணாடியில்லை என்றால், உங்களுக்கு நம்பிக்கையான, உண்மையுள்ள ஒருவரிடம் சென்று, 'முகங்களில் கரியிருக்கின்றதா பார்த்துச் சொல்லுங்கள்' என்று கேட்டுப்பாருங்கள்.

அதற்கு அவர் தரும் பதில்; அடப்பாவிகளா! நீங்கள் இந்த முகங்களை வைத்துக்கொண்டு தான் வெளியே சென்றீர்களா? வெட்கம்! வெட்கம்! செல்வதற்கு முன் கண்ணாடியில் சென்று உங்கள் 'முகறையைப்' பார்த்துவிட்டுச் சென்றிருக்கக் கூடாதா? என்றுதான் சொல்லியிருப்பார்!

நாமும் இதைத்தான் அவர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதைக் கேட்காமல் மறுபடியும் உன்முகத்திலேதான் கரியிருக்கிறதென்று, நம் பின்னால் ஓடிவந்தால், அந்த மனிதனை என்னவென்று அழைப்பது ?

ஒன்றும் தெரியாத அப்பாவி மனிதன் என்றால், நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத்தான் சொல்லவேண்டும்!

இவைகளைத்தான் நாட்டு மக்களும் நல்லோரும் பெரியோரும் சொல்லுவார்கள்! இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும், திருவண்ணாமலையில் எங்களை எதிர்த்து நின்ற ஆட்சியாளர்களுக்கும் அவர்களுடன் கூடி கொட்டமடித்த கும்பலுக்கும் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டு வருகின்றது!

திருவண்ணாமலையில் தோழர் ப. உ. சண்முகம் அடைந்த வெற்றியைக் குறித்து, வெற்றி விழாக் கொண்டாடக் கூடாதென்றும், அது ஒரு பெரிய வெற்றியில்லை என்றும் கூறிக் கொண்டு, சில போக்கற்ற கட்சிகள் முகத்திலே கரியைப் பூசிக் கொண்ட பிறகும் உதட்டிலே விஷமும் உள்ளத்திலே பொருமைத் தீயையும் வளர்த்துக் கொண்டு நாட்டிலே நடமாடுகின்றன.

திருவண்ணாமலையின் வெற்றியைக் குறித்து தி. மு. க. வெறிபிடித்து அலைகிறது என்றும் சொல்லுகின்றனர்.

வெற்றி விழாவை அமைதியான முறையிலே நாம் கொண்டாடுவதை 'வெறியாட்டம்' என்றழைக்கின்றனர், அரசியல் தெரியாதவர்கள், பாவம்!

நாங்கள் அமைதியாக இருந்து அடைந்த வெற்றியானது அப்பழுக்கற்ற— பாராட்டத்தக்க வெற்றி என்று பல பத்திரிகைகள் வெளிப்படையாக ஒத்துக்கொண்டிருக்கின்றன!

எவ்வளவோ இன்னல்களைச் சந்தித்த பின்னர், நாங்கள் அடைந்த இந்த வெற்றியைக் குறித்து வெற்றி விழாக் கொண்டாடாமல் வேறு எப்படியிருக்க முடியும் ?

வெற்றி விழாக் கொண்டாடுவதென்பது இன்று நேற்று நாங்களாகக் கொண்டுவந்தது அல்லவே?

வெற்றிக்கு விழாவெடுப்பது என்பது தமிழகத்தில் தொன்று தொட்டு வந்துள்ள வழக்கம். தமிழனுக்கே உரிய தனி பண்பாடு. நீங்கள் விழாக் கொண்டாடாமல் இருந்திருந்தால் ஒரு வேளை நீங்கள் தமிழ் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதிலே உங்களுக்கே சந்தேகம் இருந்திருக்கலாம்.

வெற்றி என்றதும், வெறிபிடித்து அலைவது என்பது எங்களது நோக்கமுமல்ல—தொழிலுமல்ல.

திருவண்ணாமலையிலே நமது தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் குறைந்த வாக்குகள் அதாவது ஆயிரத்து நானூற்று எழுபத்தைந்து வாக்குகள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றிக்காக விழாக் கொண்டாடக் கூடாது என்று சிலர் கூறுகின்றனர்-தயவுசெய்து எத்தனை வாக்குகள் வித்தியாசத்தில் ஒருவர் வெற்றிபெற்றால், அந்த வெற்றியைக் குறித்து விழாக் கொண்டாடலாம்? சற்றே பதில் தருவீர்! என்று அந்த 'மேதை'களைக் கேட்டுக்கொள்கிறோம்.

நீங்கள் எல்லா மேதாவிகளும் சேர்ந்து திருவண்ணாமலையில் செய்யக்கூடாத அநியாயங்கள் எத்தனை எத்தனை உண்டோ அத்தனையையும் செய்துபார்த்தும் உங்கள் திருமுகத்திலே ஒருமுகமாக நின்று திருவண்ணாமலை மக்கள் பூசியக் கரியைக் கழுவிக் கொள்ளாமல்கூட, அதே முகத்தை வைத்துக்கொண்டு எங்களிடம் வந்து 'நீங்கள் விழாக் கொண்டாடக் கூடாது' என்று சொல்லுகின்றீர்களே, வெட்கமில்லையா உங்களுக்கு? என்று கேட்கிறோம்!

த. அ. க. திருவண்ணாமலையில் ஆளும்கட்சியுடன் சேர்ந்து கரி பூசிக்கொண்டதற்கு சில காரணங்களைக் காட்டுகின்றது. அவர்களின் தலைமை, அரசியல் பண்பாட்டில் (அப்படியென்று இவர்களுக்கு ஒரு பண்பாடு உண்டா? என்று திருவண்ணாமலை மக்கள் கேட்பதும் காதுகளில் ஒலிக்கின்றது) ஆழ்ந்த நம்பிக்கைக்கொண்டது என்றும் அது பிரிவினையின் பேரில்கொண்ட வெறுப்பு காரணமாக தி. மு. க.வின் வெற்றியைக் த. அ. க. விரும்பவில்லை என்றும் அதனால், தொகுதியில் உள்ள கழகக்கிளைகள், வேலூரில் கூடிய மாநில மாநாட்டின் தீர்மானத்திற்கிணங்க காங்கிரசு அபேட்சகருக்குத் தார்மீக ஆதரவு தந்தன என்றும் ஒரு துணைத்தேர்தலில் இதற்கு அதிகமாகச் செல்ல வேண்டிய அவசியம் இருப்பதாக அவர்களின் தலைமைப்பீடம் கருதவில்லை என்று கூறிக்கொள்கிறது;

காங்கிரசை ஆதரிக்க வேண்டுமென்று உங்களை யார் தீர்மானம் போடச்சொன்னது? தீர்மானம் போடாமல் ஆதரித்தால் செல்லாதா?

தீர்மானம்தான் போட்டுவிட்டீர்களே, பிறகு உங்களுக்குத் தனியாகக் கட்சி எதற்கு?

தன் கட்சியின் கொள்கைகளை நிறைவேற்றும் வழிவகைகளை ஒட்டித்தான் எந்த கட்சியும் இயங்கும் — இயங்கவேண்டும். அல்லது, பிற கட்சியுடன் ஏதாகிலும் ஒரு ஒப்பந்தமாவது இருக்க வேண்டும். ஒன்றுமே இல்லாமல் நீங்கள் காங்கிரசை ஆதரித்த

(9-ம் பக்கம் பார்க்க)


**திராவிடன்** 17-ம் ஆண்டுப் பயணத்துவக்கம்

கடந்த 16 ஆண்டுகளாக இடைவிடாது
கழகக் குரலை ஒலித்துவரும் திராவிடன்
15-8-63 அன்று தனது
17ம் ஆண்டுப் பணியைத்துவக்குகிறான்

17-ம் ஆண்டுத் துவக்கச் சிறப்பிதழ்
மிகச்சீரிய முறையில் தயாராகிறது.

* அறிஞர் **அண்ணா** அவர்களின் வாழ்த்துச் செய்தி!
* கழக முன்னணி வீரர்கள் தந்திடும் கருத்து விருந்து!
* கதை—கட்டுரை—கவிதைத் தொகுப்பு!

அதிக பக்கங்கள் : மூவண்ண முகப்பு

17—8—63 அன்று வெளிவருகிறது.

விலை 25 காசு.

சிறப்பிதழில்
**கிளியோபாட்ரா**
தொடரோவியம் துவக்கமாகிறது.

விவரங்களுக்கு :—
நிர்வாகி—திராவிடன். 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை 1.

2-ம் பக்கத் தொடர்ச்சி

தன் மூலம் எந்த இலட்சியத்தை நிறைவேற்றினீர்கள்?

பிரிவினையை எதிர்த்தோம் என்கிறீர்கள். சரி, ஒப்புக்கொள்வோம். முடிவு என்னவாயிற்று? பிரிவினைதானே வெற்றிபெற்றது!

நாணயமானவர்களாய் இருந்தால், உங்கள் போக்கைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

தோல்வியைத் தோல்வி என்று ஒப்புகிறவன்தான்தான் உண்மை வீரன்!

மேதை சாக்ரடீசுக்கு அந்நாட்டு அரசாங்கம் சிறைச்சாலையில் விஷம் கொடுத்தபோது, நீதிமன்ற தீர்வுக்கும் கட்டுப்பட்டு முகம் சுளிக்காமல் அந்த விஷக் கோப்பையில் அமிர்தம் நிறைந்திருப்பதாக எண்ணி மகிழ்ச்சியுடன் வாங்கிக் குடித்துவிட்டு உயிர் நீத்தார் அந்த அறிவு மேதை. காரணம் அவர் நாகரீகம் தெரிந்தவர். நீதிக்குத் தலைவணங்கும் பண்பு அவருடைய உடலிலேயே ஊறியிருந்தது. எனவே நீதி மன்றத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டார்.

ஆனால் நீதி மன்றத்தின் தீர்ப்பைவிட மிகச் சிறந்ததான மக்களின் தீர்ப்பு திருவண்ணாமலையில் தெளிவாகக் கிடைத்த பின்பும் ம. பொ. சி. போன்றவர்களுக்கு அதை நாகரீகத்தோடு ஏற்றுக்கொள்ளும் பண்பு இன்னும் வரவில்லை—வருந்துகிறோம்.

இந்தி இந்த நாட்டின் மீது திணிக்கப்பட்டு விட்டால், பிறகு நீங்கள் தமிழரசுக் கழகம் நடத்த முடியுமா? இந்தி அரசுக் கழகம் அல்லவா நடத்த வேண்டும்!

எந்த கொள்கையில் ஒற்றுமை கண்டு நீங்கள் காங்கிரசை ஆதரித்தீர்கள்? எங்கள் பிரிவினைக் கொள்கை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் நடுநிலையாக இருந்து கொண்டு தேர்தலில் எவரையும் ஆதரிக்காமல் இருந்திருந்தால் ஏதோ ஒரு கடுகளவு விவேகமாவது உங்களுக்கு இருப்பதாக நினைக்கலாம். அதைவிட்டு விழுந்து, விழுந்து ஆதரித்தீர்கள். இப்போது படுகிறீர்கள்? அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?

திராவிட முன்னேற்றக் கழகமானது 1957ல் இருந்த நிலைக்கும் பிறகு இப்போது 1963-ல் உள்ள நிலைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கழகம் சரிந்துப் போய்ந்து விட்டது என்றும் வளர்ச்சியடையவில்லை என்றும் பள்ளிக்கணக்குப் போடத் தெரியாத மாமேதையான ஒருவர் இந்த அரிய ஆராய்ச்சியை மேற்கொண்டு திருவண்ணாமலைத் தொகுதி இரட்டை மெம்பர் தொகுதியாக இருந்திருக்கிறது. அப்போது, 1957ம் ஆண்டில் தோழர் ப. உ. சண்முகம் அவர்களுக்கு பதிவான வாங்குச் சீட்டுகள், 48447 ஆகும். காங்கிரசுக்காரர் பெற்றது 32273 ஆகும்.

இரண்டு தொகுதிகள் ஒன்றாக இருந்தபோது, ப. உ. ச.வுக்குக் கிடைத்திருக்கும் வோட்டுக்களில் பாதி அளவுதான் (அதாவது சுமார் 24000 வாக்குச் சீட்டுகள் மட்டுமே) 1963-ம் ஆண்டில் தொகுதி பிரிக்கப் பட்டபிறகு கிடைத்திருக்க வேண்டும் ஆனால். திராவிட முன்னேற்றக்கழகம் பெற்றிருக்கும் வளர்ச்சியின் காரணமாக மேலும் ஒரு 14000 வோட்டுக்களை அதிகமாகப் பெற்று 1963-ல் 38666 வாக்குகளைப் பெற்றிருக்கின்றார் தோழர். ப. உ. ச.

இதிலிருந்து நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்தே யிருக்கின்றது என்பது உறுதியாகிறது!

எதிர்காலம் இனி தி.மு.க வின் கைகளில்! இதை மாற்றுக்கட்சியினர் உணர்ந்து கொண்டால் தான் மக்களிடம் கொஞ்சமாவது அவர்களுக்கு பற்றுதல் இருக்கும். எனவேதான், நண்பர் ம.பொ.சி. போன்றவர்கள் இனியாகிலும் திருந்தி தமிழகத்தில் தங்களுக்கென நல்லதொரு அரசியல் பாரம்பரியத்தை உருவாக்குவார்கள் என நம்புகிறோம்!

இதை ஏன் இவ்வளவு வற்புறுத்திச் சொல்கிறோம் என்றால், தி. மு. க. வின் மீது நண்பர் ம. பொ. சி. அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் எவ்விதக் 'காழ்ப்பும்' கிடையாது என்று அவர் அடிக்கடி தம்பட்டகடித்துக் கொள்வதால்தான்.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்து விடுவதற்காக யாரோடு வேண்டுமானாலும் கூட்டுச் சேர்ந்துக் கொள்ளலாம் என்ற போக்கில் செல்வாரானால் அது தங்களுக்குத் தாங்களே குழி வெட்டிக் கொண்ட கதையாகத்தான் முடியும்!

நண்பர் ம.பொ.சி. அவர்களே தமிழுக்குத் துரோகம் செய்யாதீர்!

இந்தி ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாகாதீர்! என்று அறிவுறுத்துகிறோம்.

வாழ்க எங்கள் அண்ணா!

வளர்க எங்கள் தி. மு. க.!

O

# வென்றிடுவோம்!

——(0)——

எத்துணை யாண்டாய் எழில்வளர் நாட்டார்!
இருப்பதைத் தந்து இரந்திடுவார்;
இன்மொழி தன்னைப் புரந்திடுவார்!
நித்தமும் ஆள்வோர் நெருக்கிடும் பிடியில்
நிம்மதி இழந்து வாழுவதோ;
நெஞ்சங் கலங்கி வாடுவதோ!
கத்தும் கடல்சூழ் கவினுடை நாட்டோர்
களிப்புற வாழ வழிகண்டார்;
கவினுடை கழகந் தான்கொண்டார்!
முத்தமி ழண்ணன் மொழிந்திடும் நெறியில்
உவப்புடன் நன்றே உழைக்கின்றார்
உயர்வுகள் நாளும் பெறுகின்றார்!

வாட்டிடும் வரியால் வறுமையைப் பெருக்கி
வஞ்சகர் இன்புறச் செய்கின்றார்;
வாய்மையர்க் கின்னல் புரிகின்றார்!
பூட்டியே சிறையில் அறிஞரை அடைக்கப்
புதுமைச் சட்டம் தீட்டுகிறார்;
பொதுமக் களையும் வாட்டுகிறார்!
நாட்டினர் அண்ணா காட்டிய நெறியில்
நலமுற நாளும் செல்கின்றார்;
வளமுற வழிகள் சொல்கின்றார்!
ஈட்டிய பொருளை இனிநில வழியில்
இறைத்துமே ஆள்வோர் அழிக்கின்றார்;
இலையெனின் பின்னர் விழிக்கின்றார்!

ஒருசிலர் பேசும் இந்தியே ஆட்சிக்[கு]
உகந்தது என்று கூறுகிறார்;
உரைத்ததம் வாக்கை மீறுகிறார்!
திருவுடன் வாழ்ந்த தென்னக மக்கள்
திக்கற் றிரப்பை நாடுகிறார்;
தீய்க்கும் வறுமையில் வாடுகிறார்!
குருதியைக் கொட்டிக் கொடுமொழி தன்னின்
கொட்டத்தை இன்றே அடக்கிடுவோம்:
குறுமதி யோரை மடக்கிடுவோம்!
வருவது வாட்டும்; வெஞ்சிறை தரட்டும்;
வண்டமிழ் காக்கச் சென்றிடுவோம்
வாய்மையால் நாமே வென்றிடுவோம்!

கவிஞர் முயிலை முத்தெழிலன்

## திராவிடன் சந்தா விவரம்

———

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ... | ரூ. 8. |
| ஆறு மாதம் | ... | ரூ. 4. |
| தனிப்பிரதி | ... | 16 காசு. |

நிர்வாகி: திராவிடன், சென்னை 1

## வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு

17—8—63 சனிக்கிழமை இரவு 9 மணிக்கு பம்பாய் தாராவி வி. கே. வாடி, 8 சால் எண், இல்ல எண் 9-ல் செல்வன் யு. செல்லையா—செல்வி. பிலோமீனு ஆகியோருக்கு பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராஜன் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் டி. டி. செல்லத்துரை, ஆரியசங்காரன், மணிமொழியார், சாந்தி வேந்தன் எம்.ஏ.எல்.எல்.பி., மா. இரா. ஏ, இரத்தினசாமி நெல்லை செழியன், சுப. குமார், நெல்லை சு. தங்கையா, உ. அ. செல்லையா மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர். அனைவரும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

அன்புள்ள,

வரவேற்பு: சங்கரலிங்கம், உசிலன்குளம்.

நெல்லை வளவன் எஸ். செபஸ்டியன்

பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி 33581




# "நெஞ்சம் மறப்பதில்லை"

"பூர்வஜன்மத்தின் விளைவு" என்பதில் நம்பிக்கைக் கொண்ட ஓர் இளைஞனின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட கதை. விவாதத்திற்குரிய அந்தப் பிரச்சினையை மட்டும் ஒதுக்கிவிட்டுப்பார்த்தால் 'நெஞ்சம் மறப்பதில்லை' அருமையான படைப்பாகும்.

கதை—வசனம் ஆகியவைகளை ஸ்ரீதர் அளவோடு அதுவும் சிறப்புற அமைத்திருக்கிறார்.

பழைய பந்தா சிறிதுகூட மாறுத ஜமீன்தார். தனது மகன் ராசா, தமது பண்ணையாளின் மகள் கண்ணம்மாவைக் காதலிப்பது தனது குடும்பப் பெருமையையும் சம்பிரதாயத்தையும் சீர்குலையச்செய்யும் என்று எண்ணுகிறார்.

மகன் ராசாவோ, கண்ணம்மாவையே மணப்பேன், இல்லையேல் வாழ்வை இழப்பேன் என்ற உறுதிப்பாட்டினைக் கொண்டு, தந்தையின் கடுமையான கட்டளையையும் மீறிப் பலவித கொடுமைகளுக்கு ஆளாகிறான். அதே போல கண்ணம்மாவும் அவளது தந்தையும் ஜமீன்தாரின் கண்டிப்பான உத்திரவுக்கேற்ப சவுக்கடி தண்டனையிலிருந்து தங்கள் வீடு தீக்கிரையாக்கப்படும் கொடுமைகளுக்கு ஆளாகித் தவிக்கின்றனர்.

இவ்வளவிற்குப் பிறகும் இளைய ஜமீன்தார் ராசா கண்ணம்மாவைத்தான் மணப்பேன் என்ற உறுதியைக் கைவிடவில்லை. எனவே ராசா காவலில் வைக்கப்படுகிறான். கண்ணம்மாவுக்கும், ஜமீன்தாரின் வேலைக்காரனுக்கும் கடிமணம் நடக்கிறது. காவலின் கட்டுகளை உடைத்தெறிந்த ராசா, மணமேடையில் கண்ணீர் சிந்திய கோலத்துடன் வீற்றிருந்த கண்ணம்மாவைத் தூக்கிச் செல்கிறான். செய்தியறிந்த ஜமீன்தார் அவர்களைத் துரத்திச் செல்லுகிறார். இறுதியாக ஜமீன்தாரின் முரட்டுத்தனமான தண்டனைக்கு அதாவது அவரது துப்பாக்கி வேட்டுக்கு கண்ணம்மா பலியாகிறாள். ராசா அதே ஏக்கத்தால் தனது வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொள்கிறான்.

மகனின் பரிதாப முடிவுக்குப் பிறகு ஜமீன்தார் தமது இறுதி வாழ்நாட்களை அவரது சொந்த ஊரின் ஓர் காட்டிலுள்ள சிறிய மாளிகையில் நடத்திவருகிறார்.

அதே ஊரில், ஓர் குடும்பத்தில் பிறந்த பெண் (கண்ணம்மாவைப் போலவே எல்லா பாவனைகளுடன்) வாழ்ந்துவருகிறாள். அவளது சகோதரன் பாலு விடுமுறைக்காக தனது கிராமத்திற்கு வருகிறான், தனது நண்பனுடன்!

இருவரும் அந்த ஊரை நெருங்கும்போது வழியிலே தென்பட்ட காரும் சிறு மாளிகையும் அந்த நண்பனின் பூர்வீக ஜன்மத்தின் நினைவுகளைத் தூண்டுகிறது.

அவனின் அந்த எண்ணத்தையும் நம்பிக்கையையும் பாலு கண்டித்து வீட்டுக்கு அழைத்துச் செல்லுகிறான். பாலுவின் தங்கை சில நாட்களாக நினைவு இழந்திருப்பதால் அவளை ஓர் அறையில் பூட்டிவைத்திருக்கிறார்கள் அவளது பெற்றோர். அவளது கோலத்தைக்கண்ட அவன் பாலுவிடம் விவரம் கேட்கிறான். காட்டிலிருந்த மாளிகைக்குச் சென்று வந்தவள், அன்றிலிருந்து நினைவை இழந்து தவிப்பதாக பாலு கூறுகிறான். பின்னர் அந்தக் காட்டிற்குச் சென்று விவரம் அறிய முயற்சிக்கிறான். தனது பூர்வீக ஜன்மத்தின் நினைவுகள் அவனுக்குத் தோன்றுகின்றன. கடைசியாக 109 வயதான அந்த ஜமீன்தாரைச் சந்திக்கிறான். அவரிடம் அந்த மாளிகையின் விவரங்களை அறிகிறான்.

தான் காலித்தகண்ணம்மாதான் தனது நண்பனின் தங்கையாக இங்கே பிறந்து வளர்கிறாள் என்றும், தான் ஜமீன்தாரரின் மகன் ராசாவாக வாழ்ந்திருந்து மறுபிறவி எடுத்திருப்பதாகவும் எண்ணுகிறான்.

உடனே ஓட்டமாக ஓடி பாலுவிடம் இந்தக் கூற்றைச் சொல்லுகிறான். அவன் இதெல்லாம் மூட நம்பிக்கையென்று கண்டிக்கிறான் ராசா மேலும் மேலும் வற்புறுத்தினான், நண்பனின் தங்கையை அந்த மாளிகைக்கு மீண்டும் அழைத்துச் சென்றால் நினைவு சரியாகலாம் என்று வற்புறுத்தி அதே போல அழைத்துச் செல்லுகிறார்கள். மாளிகையின் சுவற்றில் செதுக்கப்பட்டுள்ள சித்திரங்களைப் பார்த்ததும் அவளுக்கு பழைய நினைவுகள் வருகின்றன. இதை மறைவாகயிருந்து பார்த்த ஜமீன்தாருக்கு, கண்ணம்மா தமது துப்பாக்கி வேட்டால் சாகாமல் இன்னும் உயிர் வாழ்கிறாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டு அவளை ஒழித்துவிட வேண்டுமென்ற வெறிகொள்கிறார். கண்ணம்மாவின் நோயும் குணமடைந்தது. இதைக் கண்ட பாலுவின் பெற்றோர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். பாலுவின் யோசனைக்கிணங்க, தனது நண்பனுக்கும் தங்கைக்கும் திருமணம் உறுதியாகிறது.

ஒருநாள் தண்ணீர் கொண்டு வர கண்ணம்மா குளத்திற்குச் சென்றபோது வழியில் அந்த ஜமீன்தார் குறுக்கிட்டு, காட்டிலுள்ள மாளிகையில் அவளின் காதலன் பாம்பு கடியால் தவிப்பதாகக்கூறி அழைத்துச் செல்லுகிறான். ஆனால், நடுகாட்டில் கிழஜமீன்தார் அவளைத் தவிக்கவிட்டு பூமியில் மறைத்து வைத்த துப்பாக்கியை எடுத்து அவளைச் சுட முற்படுகிறார்! நேரமாகியும் கண்ணம்மா வீட்டுக்கு வராததைக் கண்ட நண்பனும் பாலுவும் காட்டை நோக்கி வருகிறார்கள். கிழ ஜமீன்தாரின் வெறித்தனத்தைத் தடுக்கிறார்கள். எதிர்பாரா விதமாக ஜமீன்தார் சாகிறார். இறுதியாக இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது.

### கல்யாணகுமார்!

தாயில்லாப்பிள்ளை — நெஞ்சில் ஓர் ஆலயம் ஆகிய சிறந்த படங்களுக்குப்பிறகு இந்தப்படத்தில் தான் கல்யாணகுமார் தனது திறமையைக் காட்டும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார். ஒவ்வொரு கட்டத்திலும் கல்யாணகுமாரா இவ்வளவு பிரமாதமாக நடிக்கிறார் என்று ரசிகர்கள் பாராட்டும் வகையில் டைரக்டர் இவரிடம் வேலை வாங்கியிருக்கிறார்!

### தேவிகா

திரைப்பட உலகின் தலைசிறந்த நடிகையாவேன் என்பதை எடுத்துக்காட்டும்வகையில் அபாரமாக நடித்திருக்கிறார். எந்தக் கட்டத்திலும் சோடை போகவில்லை. குறிப்பாக தனது காதலன் ராசாவுடன் செல்லுகையில் ஜமீன்தார் துப்பாக்கியால் மூன்றுமுறை சுடும் கட்டத்தில் துப்பாக்கி வேட்டுகளுக்கு இரையாகி துடிதுடிக்கும் போது தேவிகா, அனுபவம்மிக்க ஆங்கில நடிகைகளைப் போல் நடிக்கிறார் என்றால் மிகையாகாது. காதல் கட்டங்களில் அவர் நடிக்கும் உயர்தர நடிப்பு தமிழ்ப்படத் துறைக்குப் பெருமை அளிப்பதாகும். ஜமீன்தாரரின் கட்டளைக்கேற்ப சவுக்கடி தண்டனைக்கு ஆளாகித் துடிக்கும் போதும் கதையில் இறுதிக்கட்டத்தில்காட்டில் தவிக்கும்போது தேவிகாவின் நடிப்பு இணையற்று விளங்குகிறது. சுருங்கச் சொன்னால் 'நெஞ்சம் மறப்பதில்லை' படைப்பின் மூலம் இந்திய திரைப்பட உலகின் முன்னணி நடிகைகளில் தாமும் ஒருவர் என்ற சிறப்புக்கு உரியவராகி விட்டார்.

### நம்பியார்!

முரட்டு சுபாவமும், குருட்டு சம்பிரதாயமும் குடி கொண்ட ஜமீன்தாராகவே மாறி விடுகிறார். அதாவது தாம் ஏற்ற பாகத்தோடு இரண்டறக் கலந்து விடுகிறார்! வேறு என்ன சொல்ல வேண்டும். அதிலும் 100 வயதுக்கு மேற்பட்ட கட்டத்தில் கிழ ஜமீன்தாராக நடிக்கும் போது நம்பியாரின் நடிப்பு அபாரம்! அபாரம்!

### சகஸ்ரநாமம்

பண்ணையாள் வேலய்யனாகத் தோன்றி கச்சிதமாக நடித்திருக்கிறார். சமீன்தாரரின் கட்டளைக்கேற்ப தனது மகளைதானே சவுக்கால் அடித்துத் துன்புறுத்தும் கட்டத்திலும், தண்டனையை நிறைவேற்றிய பின்பு நினைவு இழந்து தவிக்கும் தனது குடிசைக்கு மகளைத் தூக்கிச் செல்லலாமா என்று ஜமீன்தாரிடம் அனுமதி கேட்கும்போதும் சகஸ்ரநாமம் அடக்கமும் அருங்குணமும் ஒருங்கே அமைந்த பண்ணையாளராகவே மாறி விடுகிறார். ஒவ்வொரு கட்டத்திலும் அப்பழுக்கின்றி நடிக்கிறார்!

### மனோரமா—நாகேஷ்

கதையோடு ஒட்டிய நகைச்சுவைக் கட்டங்களில் தோன்றி நடிக்கின்றனர். துளிகூட ஆபாசமில்லாத நகைச்சுவை சம்பவங்கள்! ரசிகர்களுக்கு இவர்களது நடிப்பும் சிறந்த விருந்தாக அமைந்துள்ளது.

மற்றும் கரிக்கோல் ராஜி, ஜெமினி பாலு உள்ளிட்ட ஒவ்வொரு நடிகரும் கச்சிதமாகவே நடித்துள்ளனர்.

### பாடல்கள்

கவிஞர் கண்ணதாசனின்—நெஞ்சம் மறப்பதில்லை, அழகுக்கும் மலருக்கும் சாதியில்லை உள்ளிட்ட ஒவ்வொரு பாடலும் சிறப்புற அமையப் பெற்றுள்ளன.

### இசையமைப்பு

விசுவநாதன் — இராமமூர்த்தி ஆகியோரின் இசையமைப்பும், இப்படத்தின் சிறப்புக்குத் துணையாய் அமைந்துள்ளன.

### ஒளிப்பதிவு

தோழர் வின்செண்ட் இப்படத்தில் தமது 'ஒளிப்பதிவு' பணியின் திறமையைப் பயன்படுத்தியுள்ளதை எவ்வாறு பாராட்டுவதென்றே புரியவில்லை. திரைப்பட உலகின் 'ஒளிப்பதிவு வல்லுநர்' என்று அவரைப் பாராட்டினாலும் தகும். சிறந்த ஆங்கிலப் படத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் மிக நுணுக்கமாக தமது ஒப்பற்ற திறமையைக் காட்டியிருக்கிறார்.

### டைரக்ஷன்

திரைப்பட உலகின் சிறந்த டைரக்டர்களில் ஒருவராக தோழர் ஸ்ரீதர் விளங்கி வருவது அனைவரும் அறிந்ததே யாகும். நெஞ்சில் ஓர் ஆலயம், கல்யாண பரிசு போன்ற படங்களில் தாம் பெற்ற புகழை மீண்டும் நெஞ்சம் மறப்பதில்லை என்ற இப்படத்தில் நிலை நாட்டுகிறார். எந்த விதமான குறையும் கூறுவதற்கு இடமில்லாதவாறு படத்தை உருவாக்கி யிருக்கிறார்.

'நெஞ்சம் மறப்பதில்லை' கதை அடிப்படையில் நமக்குச் சிறிது கருத்து வேறுபாடு இருப்பினும் பொதுவாக தமிழ்ப்பட உலகத்திற்கு புகழைத் தேடித் தரும் வகையில் அமைந்துள்ளது. இவ்வித சிறந்த படத்தைத் தயாரித்த மனோகர் பிக்சர்சாரின் அரிய முயற்சிக்கும் ரசிகர்களின் பாராட்டு உரிமையுடையதாகும்.

—வீரன்

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1